விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 07 (23 - 07 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 155

## இன்றிலிருந்து தபாலகங்கள் இயங்கும்

(சாவகச்சேரி)

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் பொது சனங்களின் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு இன்றிலிருந்து காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ் மாவட்டத்தில் உள்ள சகல தபால் நிலையங்களும் இயங்கும்என யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் ச. சடாச்சரநாதன் நேற்றுகாலை பிரதம தபாலகத்தில் (4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ சடலங்களை ஏற்க அரசாங்கம் மறுப்பு

## விடுதலைப் புலிகளிடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் முள்ளியான் - புல்லாவெளி பகுதியில் நடைபெற்ற கடும் மோதல்களின்போது விடுதலைப்புலி வீரர்களால் மீட்கப்பட்ட இராணுவத்தினரின் 32 சடலங்களைப் பொறுப்பேற்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் மறுத்துள்ளது. இந்தத் தகவலை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அறிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட 32 இராணுவத்தினரின் சடலங்களையும் இன்று நண்பகல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்க விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தனர் இந்தச் சடலங்களைப் பொறுப்பேற்று அவற்றை சிறிலங்கா சடற்படைமூலமாக இலங்கை அரசிடம் ஒப்படைப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளும் ஒப்புக்கொண்டனர். ஆனால் திடீரென இந்தச் சடலங்களை ஏற்க முடியாதென சிங்கள அரசு செஞ்சிலுவைச் சங்கத்திடம் அறிவித்ததாக தெரியவருகின்றது. சிறிலங்கா அரசின் இந்த முடிவை நேற்றிரவு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்திற்கு அறிவித்தார்.

பெருந்தொகையான இராணுவத்தினரின் சடலங்களைப் பிரேதங்களாக (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாமினுள் இரு மேஜர்கள் பலி

ஆனையிறவு முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் இரண்டு மேஜர் தரத்தைச் சார்ந்த அதிகாரிகளும் அடங்குவர் இவர்கள் இருவரும் ஆனையிறவு முகாமினுள் இருந்த அதிகாரிகளாவர். இவர்களில் 37 வயதான மேஜர் புத்ததாஸ நான்காம்நாள் யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளார் எனக் கொழும்புச் செய்திகள் கூறியுள்ளன.

## வீதி ஒழுங்கு பேண ஒத்துழைக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய போர்க்கால சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு வீதிப் போக்குவரத்து பாதுகாப்பிற்கு அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்புத் தரும்படி தமிழீழ காவல்துறையினர் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

இதற்காக வீதிப் போக்குவரத்தை பராமரித்துவரும் தொண்டர்களின் பணிப்புரைகளுக்கு இசைவாக நடந்து கொள்ளும்படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் வீதிக்கட்டுப்பாடுகள் உள்ள வீதிகளை பயன்படுத்தும்போது மிகவும் எச்சரிக்கையாகவும் அவதானமாகவும் இருக்கும்படியும் இயன்றவரை இவ்வாறான வீதிகளைத் தவிர்த்து மாற்று வீதிகளைப் பயன்படுத்தும்படியும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளியான் - புல்லாவெளி இருமுனைகளில்

# 36 மணி நேரம் நிகழ்ந்த கடும் சமரில் 100 இராணுவம் பலி; 300 மேல் காயம்

கட்டைக்காடு-வெற்றிலைக் கேணிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை பிற்பகலில் இருந்து திங்கட்கிழமை அதிகாலை வரை நடந்த மோதலின் நூற்றிற்குமேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முன்னூறுக்குமேற்பட்ட படையினர் காயமடைந்தனர். பலநவீன ஆயுதங்களும் 32 படையினரின் சடலங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இருமுனைகளில் நடந்த இக் கடும் சமரில் 28 புலிகள் வீரமரணமடைந்தனர்.

கட்டைக்காடு-வெற்றிலைக் கேணிப்பகுதியில் தரையிறங்கி புல்லாவெளி வரையும் முன்னேறியிருந்த இராணுவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## சலாடின் கவச வாகனம் நேற்று புலிகளால் அழிப்பு

### 12 படை இறந்ததாக சிறிலங்கா அறிவிப்பு

(நமது நிருபர்)

கட்டைக்காடு-வெற்றிலைக் கேணிப் பகுதியில் தொடர்ந்து நேற்று நடைபெற்ற மோதலில் ஒரு சலாடின் கவச வாகனம் புலிகளால் அழிக்கப்பட்டது: பல காவல் அரண்களும் பலத்த சேதமடைந்தன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

நேற்று நடந்த மோதல் பற்றித் தெரியவருவதாவது, முள்ளியான் பகுதியில் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த மோதலின்போது சுமார் 10-30 மணியளவில் சலாடின் கவசவாகனம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 28 போராளிகள் வீரமரணம்

(இயக்கச்சி)

முள்ளியான் பகுதியில் விடுதலைப் புலிகள்மேற் கொண்ட அதிரடித் தாக்குதலிலும் அதைத் தொடர்ந்து நேற்று காலைவரை ஏற்பட்டமோதலிலும் இருபத்தெட்டு போராளிகள் வீரமரணமடைந்தனர். இதில் பெண் போராளிகள் சிலரும் அடங்குவர்.

இதில் 22 விடுதலைப் புலிகள் விபரம் வருமாறு:

★ தாசன் (முள்ளியவளை)
★ ஆனந்தன் (நேசர் அமலதாஸ் சுண்டிக்குளி)
★ சேரனேஸ் (மார்க்கண்டு தனேசரம்பிள்ளை புத்தூர் மேற்கு புத்தூர்)
★ வாசன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தானியங்கித் துப்பாக்கிகள் 40க்கு மேல் புலிகளால் மீட்பு

முள்ளியான் பகுதியில் இராணுவத்தினர் மீது நேற்று காலை விடுதலைப்புலிகள் மேற் கொண்ட அதிரடித் தாக்குதலின் போது பல நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் சிலவற்றின் விபரம் வருமாறு

★ ரி 56 ரக எல். எம். ஜி. - 03
★ 203 டொங்கான் - 03
★ 40 எம். எம். ரி. 69 ரக ஆர் பி ஜி. - 02
★ 60 எம். எம். மோட்டர்-03
★ ரி - 56 ரக துப்பாக்கி- 25

மேலும், பெரும் எண்ணிக்கையான ரவைகளும், எறிகணைகளும் கிரனேட்டுக்களும் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை புல்லாவெளிப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## எரி குண்டுகளால் காடுகள் தீப்பற்றின

(இயக்கச்சி)

சங்கத்தார் வயல், இயக்கச்சிப் பகுதிகளில் சிறிலங்கா விமானங்கள் வீசிய நேபாம் குண்டுகளினால் மரங்கள் வீடுகள் மற்றும் பற்றைக்காடுகள் தென்னை மரங்கள் தீப்பற்றி (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவின் 13ஆம் திகதி வீரமரணமடைந்தோர்

ஆனையிறவு முகாம் முற்றுகைப் போரில் கடந்த 13ஆம் திகதிச் சமரில் வீரமரணமடைந்த விடுதலைப்புலி வீரர்களின் விபரம்வருமாறு:

★ மன்சூர் (கதிரிப்பிள்ளை செல்வகுமார் நாகர்கோயில்) வடக்கு பருத்தித்துறை
★ நர்த்திபன் (அழகராசா புஸ்பராஜா சுப்பர்மடம் பருத்தித்துறை)
★ கேசரி (பாலகிருஷ்ணன் அரசகேசரி தம்பசிட்டி புலோலி மேற்கு புலோலி)
★ டக்ளஸ் (விக்னேஸ்வரராஜா சதீஸ்வரன் ஆஸ்பத்திரிவீதி மானிப்பாய்)
★ சுரேஸ் (கணேஸ் புலேந்திரன் பிராம்பத்தா தாவழடி)
★ ஜஸ்ரின் (கிருஷ்ணபிள்ளை சுதாகர் கொற்றாவத்தை அல்வாய் மேற்கு)
★ சசி (சுப்பிரமணியம் குமரன் அல்வாய் கிழக்கு அல்வாய்)
★ சரன் (பொன்னம்பலம் ஜெயக்குமார் புதுதோப்பு பழங்கள் அச்சுவேலி வடக்கு)
★ அகிலன் (கதிர்காமு பாலசந்திரன் போக்கருப்பு முள்ளியான்) (3-ம்ப.பா.)

## கணனி (கொம்பியூட்டர்) இயக்குநர்கள் தேவை

கணனி பாடநெறியில் ஏதாவது ஓர் மொழியையாவது முழுமையாக கற்று தேர்ச்சி பெற்ற கணனி இயக்குநர்கள் தேவை. விண்ணப்பப் படிவங்கள் ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி
30-07-91 ஆகும்.

(B-2843)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில
20
—
06
—
1969



அரக்கர் அழிப்பில்
23
—
07
—
1989

**மகாலிங்கம் மகேஸ்வரன்**
(யாழ். மத்திய கல்லூரி மாணவன்)

இருபத்து ஆண்டு இம்மண்ணில் வாழ்ந்த
பெருவாழ்வை பதியும் வரலாறுஇனி-வருநாளில்
விண்வரை உயரும் புலிக்கொடி இம்
மண்ணின் விடியலை பொழிந்து!

தாய், தந்தை
தங்கை, தம்பி, நண்பர்கள்

நீர்வேலி. (B/2842)

## ரேஞ்சுத் சேவையில் 15 அணிகள்

(சென்னை)

தமிழக கரையோரப் பகுதிகளில் மத்திய றிசேர்வ் பொலிஸ் படையினைச் சேர்ந்த பதினைந்து அணிகள் ரேஞ்சுச் சேவையில் ஈடுபட இருப்பதாக மேற்படி படையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கார்த்திகேயன் தெரிவித்தார்.

51 வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப்படையில் இப்போது 1,60,000 பேர் இருப்பதாகவும் கார்த்திகேயன் தெரிவித்தார்.

## தொழில் நுட்ப வகுப்புகள் மீண்டும் நாளை

யாழ். தொழிநுட்பக் கல்லூரியின் சகல போதனைகளும் நாளை புதன்கிழமை 24 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும். வகுப்புகள் வழமை போல் நடைபெறும். இந்த முடிவு நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அதிபர், உப அதிபர் நிரந்தர பணியாளர் விரிவுரையாளர்கள், பகுதிநேர விரிவுரையாளர்கள் அனைவரும் கலந்து கொண்ட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

லயஞான திலகம் அமரர் என். ஆர். சின்னராசா அவர்களின் புதல்வர்கள்
என். ஆர். எஸ். ரவீந்திரன் அவர்களும்
என். ஆர். எஸ். சுதாகரன் அவர்களும்
தம் தந்தையாருக்கு அஞ்சலியாகச் செய்யும்

## நாதோபாசனை

இடம்: இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில்

காலம்: ஆடி 10, வெள்ளிக்கிழமை (26 - 07 - 91) பிற்பகல் 3 மணி

பங்குபற்றும் கலைஞர்கள்:

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| கே. ஆர். சுந்தரமூர்த்தி | கே. ஆர். புண்ணியமூர்த்தி |
| வி. கே. கானமூர்த்தி | என். ஆர். எஸ். ரவீந்திரன் |
| வி. கே. பஞ்சமூர்த்தி | என். ஆர். எஸ். சுதாகரன் |

★ மேற்படி நிகழ்ச்சியிற் கலந்துகொண்டு இளங்கலைஞர்களை ஆசீர்வதிக்கும்படி இசையபிமானிகளை வேண்டுகிறோம்.

இங்ஙனம்
இசை ஆர்வலர்கள்

(R/1570)

## நினைவு சுமக்கின்றோம்...



வெஸ்லி

**1991-07-23**



லெப். செல்லக்கிளி அம்மான்

1983 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருநெல்வேலியில் சிறிலங்காப் படையினர் மீதான அதிரடித் தாக்குதலின் போது வீரமரணமெய்திய
லெப். செல்லக்கிளிஅம்மான் (சதாசிவம் செல்வநாயகம் - கல்வியங்காடு)

1988 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
இராசன் பபி (செல்வராசா புஷ்பராசன் - மலாலி)

989 ஆம் ஆண்டு கோண்டாவிலில் வைத்து தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்
கந்தையா வேலாயுதகுமார் (சுன்னாகம்)

கோண்டாவிலில் புகையிரத நிலையத்திற்கு சமீபமாக தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான யாழ். மத்திய கல்லூரி வர்த்தகப் பிரிவு மாணவன்
மகாலிங்கம் மகேஸ்வரன் (நீர்வேலி)

சண்டிலிப்பாயில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

1990 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
தசரதன் (திருகோணமலை)

ஆனையிறவில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலின் போது வீரமரணமெய்திய
சீலன் (செ. குமாரவேல் - மன்னார்)

காங்கேசன்துறையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
பிரசன்னா (புதியான் தயாபரன் - லிங்கம் வீதி, புத்தூர்)

யாழ். கோட்டையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
அமுது (ஐயாசாமி கிருஷ்ணமூர்த்தி - கம்பர்மடம், வல்வெட்டித்துறை)

முரசுமோட்டை 2ஆம் கட்டையில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
வெஸ்லி (க. புவனேந்திரன் - சாவகச்சேரி)
சரவணன்
றேனு
மனோஜ் (தயாபரன் - கிராஞ்சி)

வவுனியா செட்டிகுளத்தில் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட தமிழ் இளைஞன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்:
- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B- 2836)

## 2-ம் ஆண்டு இதய அஞ்சலி

தமிழனாக
23
-
10
-
1965



தமிழீழத்துக்காக
23
-
07
-
1989

**செல்வன் கந்தையா வேலாயுதகுமாரர்**
**(தம்பி)**

அண்ணா! தேசத்தலைவனின் தாகம் தீர்க்க
நீ தேசபக்தனாய்க் குமுறி எழுந்ததால்
தேசத்துரோகிகள் உம்மைத் தேடிச் சுட்டனர்
அண்ணனே! நாம் தேம்பி அழுகின்றோம்!
ஆயினும் உமது சுவடுகள் தேடித் தமிழீழம்
நோக்கி எழுந்து நடக்கின்றோம்! துணிந்து நடக்கின்றோம்.

மடிந்த மாவீரரின் கனவுகள் சுமந்து
பிரபாகரனின் பாசஅணைப்பில் வளரும் பிஞ்சுகள்
மனைவியின் பாசறை அதிரப் - புலியாய்
அணியாய் எட்டுத் திக்கும் எதிர்பார்த்து
எழுந்து நிற்கின்றார்! துணிந்து நிற்கின்றார்!
தமிழீழம் மலர்வது உறுதி! இது உறுதி!

வேலாயுதகுமாரர் (தம்பி) வீதி,
உடையார் வளவு,
சுன்னாகம்.

அம்மா, அப்பா
அன்புத் தங்கைகள்,
உறவினர், நண்பர்கள்

(R-1567)

❋ சிந்தனைக்கு ❋

உண்மைகளைப் புறக்கணிப்பதால் அவை உண்மைகளாய் இல்லாமல் போவதில்லை.

— ஆல்டஸ் ஹக்ஸ்லி

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 23.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# குறை கூறிப்பயனில்லை

ஆனையிறவு முகாம் விடுதலைப்புலிகளால் தொடர்ந்தும் முற்றுகையிடப்பட்டுள்ளமையும், தரையிறங்கிய இராணுவத்தினர் முற்றுகையை முறியடிக்க முடியாமல் திணறுவதையும் கண்டு சிறிலங்கா சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகள் அலறத் தொடங்கிவிட்டன. சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடத்தையும் அரசாங்கத்தையும் குறை கூறவும் ஆரம்பித்துவிட்டன.

'ஐலண்ட்' பத்திரிகை விடுதலைப் புலிகளுக்கு எதிரான, கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ்க் குழுக்களின் ஆலோசனையை அரசாங்கம் ஏற்றிருக்குமானால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. முற்றுகையை முறியடித்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ளது.

புலிகளின் முற்றுகையை நம்பவே கடினமாகவுள்ளது என்றும், இது எப்படி நடந்தது என்பதை இராணுவத் தலைமை உடனடியாக ஆராய்ந்து எது தவறாகப் போனது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் எனவும் சண்டேரைம்ஸ் எழுதியுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினை தோற்றுவதற்கும், இரத்த ஆறு ஓடுவதற்கும் பௌத்த சங்கத்தினரும், அரசியல்வாதிகளுமே காரணமென்றால், அதற்கு நீரூற்றிச் செழித்துவளரச் செய்தவர்கள் இந்தப் பேரினவாதப் பத்திரிகைகளே ஆகும். கொழும்பில் இருந்து வெளிவரும் எந்த சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் இதற்கு விதிவிலக்கானவையல்ல.

அரசியல்வாதிகளின் இனவாதத் தூண்டுதலுக்கும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும், படுகொலைகளுக்கும் இந்தப் பத்திரிகைகள் நியாயம் கற்பித்தன. இவற்றை வழிகாட்டியாகவும் அமைந்தன. அதேவேளை சிங்களவர் மத்தியில் உருவாகிய இடதுசாரி முற்போக்கான சக்திகளுக்கு எதிராகவும் இவை தொழிற்பட்டன. இதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் உண்மைகள் சென்றடைவதைத் தடுத்து நிறுத்தின. இந்தியாவின் ஏஜென்டுகளாகத் தமிழர்களைச் சித்திரித்து ஆக்கிரமிப்பாளர் என வர்ணித்து சிங்கள மக்கள் மத்தியில் இனவெறியைத் தூண்டிவிட்டன.

அதேவேளை பேரினவாதம் ஒன்றை மட்டுமே தமது நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட இந்தப் பத்திரிகைகள் சூழ்நிலைக்கும் தேவைக்கும் ஏற்ப தமது உறவையும் மாற்றிக் கொண்டன. 1987ஆம் ஆண்டுவரை தமிழருக்கு எதிராக செயற்பட்ட பத்திரிகைகள் இந்திய இராணுவம் இலங்கை வந்தபோது அதற்கெதிராகச் செயற்பட்டன. இந்தியாவுடன் இணைந்திருந்த தமிழ்க் குழுக்களைத் தேசத்துரோகிகள் என வர்ணித்தன.

ஆனால் தற்பொழுது விடுதலைப் புலிகளுக்கும், தமிழருக்கும் எதிரான இனவாதத்தை தொடர்ந்து போதிக்கும் இந்தப் பத்திரிகைகள் தற்பொழுது தம்மால் தேசத்துரோகிகள் என வர்ணிக்கப்பட்டவர்களினதும், தமிழ் மக்களினால் விரட்டப்பட்டவர்களினதும் ஆலோசனையைக் கேட்கவில்லை என அரசாங்கம் மீது குறை கூறுகின்றன. அதாவது தேசத் துரோகத்தை விட இனவாதம் அவர்களுக்கு முதன்மையானதாகவுள்ளது.

அதேவேளை, புலிகளின் இந்த முற்றுகை நம்பவே கடினமாகவுள்ளது என சண்டே ரைம்ஸ் அறிவிருப்பது அவர்களைப் பொறுத்து பொருத்தப்பாடானது தான். நாட்டில் நடக்கும் உண்மை நிலையினை அறியாது பேரினவாத சகதியின் சூழலுக்குள் மூழ்கிப்போய்விட்ட இப்பத்திரிகைகளுக்கு வடக்குக் கிழக்கில் இதுவரை நடந்ததை முழுமையாகத் தெரிந்திருந்தால், அவை இவ்வாறான தொரு வியப்பை அடைந்திருக்கத் தேவையில்லை.

சிறிலங்கா அரசாங்கங்கள் விடும் அறிக்கைகளை அவ்வாறே பிரசுரித்து, மக்களை வெற்றி என்ற மாயைக்குள் ஆழ்த்திவிட்டுத் தற்பொழுது திடீரென முகாம் முற்றுகைக்குள், படைகளால் நகர முடியவில்லை படையினர் நூற்றுக்கணக்கில் பலி, பல நூறு காயம் என்பனவற்றை எவ்வாறு மக்கள் முன்வைப்பது.

ஆனால், கொழும்புப்பத்திரிகைகள் குறிப்பிடுவதுபோன்று ஆனையிறவுமுகாம் முற்றுகை ஒரு கற்பனைக்கு எட்டாததல்ல. இம்முகாம் முற்றுகைக்கு உள்ளாகப் போகின்றது என்பதை சிறிலங்கா இராணுவ வட்டாரங்களின் முன்பே அறிந்திருந்தது. அது தொடர்பாக அவை துண்டுப் பிரசுரங்களும் பிரசுரித்திருந்தன. ஆனால், முகாமை முற்றுகையில் இருந்து தவிர்ப்பதற்கான இராணுவத்தினரின் ஏற்பாடுகளை புலிகள் முறியடித்துள்ளனர் என்பதே உண்மை.

ஆகையினால், பேரினவாதச் சிந்தனையில் மட்டுமே அவை மூழ்கிப் போய் இருந்தமையால் அவற்றிற்கு இவை கற்பனைக்கெட்டாததாகப் போய் விட்டன. அதேவேளை, தொடர்ந்தும் இப்பேரினவாதப் பத்திரிகைகள் இவ்வாறே இருக்குமானின் எதிர்காலத்தில் தமிழீழம் உருவாகும் போது அதுவும் கற்பனைக்கெட்டாததாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## 1987 இலங்கை - இந்திய

# ஒப்பந்தத்தை ஏற்காவிடில் சிறிலங்காவிற்கு ஆபத்து

### ஜே. ஆர். ஜெயவர்த்தனா

(கொழும்பு)

இலங்கை - இந்திய ஒப்பந்தம்தான் இலங்கைக்கு பாதுகாப்பான ஒன்று என்றும் இதனை உடைத்து விடுவதால் பெரிய இராணுவ அரசியல் சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்றும் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

சென்றசனிக்கிழமை கொழும்பில் யு. என். ஏ. செய்தி ஸ்தாபனத்திற்கு அளித்துள்ள பேட்டியொன்றில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்த ஒப்பந்தத்தை செயற்படுத்தாமல் சிறிலங்கா அரசாங்கம் விட்டால் விடுதலைப் புலிகளும் அவர்களைத் தொடர்ந்து வேறு தமிழ்க் குழுக்களும் பலகோரிக்கைகளை விடக்கூடும் என்றும் இதனால் இந்தியாவும் இந்தப் போராளிக் குழுக்களை ஆதரிக்க வேண்டிய நிலை வந்துவிடும் என்றும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைத்தவிர இந்தியா, தமிழகம் உட்பட அனைவரும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் குறித்த அனைத்து ஷரத்துக்களையும் ஏற்றுக் கொண்டு நடக்கின்றனர் என்றும்,

அமைதிப்படையினர் இலங்கையைவிட்டு வெளியேறிய சமயம் விடுதலைப் புலிகள் மூச்சு விடவுமற்றே திணறிக் கொண்டிருந்தனர் என்றும் ஜே. ஆர். தெரிவித்தார்.

''அமைதிப்படையை வெளியே அனுப்பி புலிகள் மூச்சு வாங்க நேரம் அளித்தது முன்னாள் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின எனக் கூறியதை ஜே. ஆர் இப்பேட்டியில் நினைவு கூர்ந்தார்.''

விடுதலைப் புலிகள் பிரச்சினையில் இந்திய அரசு இராணுவ உதவி வழங்குமா என்று ஜே. ஆரைக் கேட்டதற்கு ''இனிமேல் இந்தியா இலங்கையின் அத்தகைய அழைப்பை ஏற்காது'' என்று தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு நிலைமை குறித்து தற்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து கேட்டபோது கருத்துத் தெரிவிக்க ஜே. ஆர். ஜெயவர்த்தனா மறுத்துவிட்டார்.

# உதவியை தடைப்படுத்தல் குழப்பம்உண்டாக்கும்செயல்

## பிரேமாவிற்கு பிரஜைகள்குழு கடிதம்

தமிழ் பேசும் மக்களின் பிரத்தியேகமான துயர் துடைப்பு நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளைக் கொழும்பில் தடைப்படுத்தி வைத்திருப்பது குழப்பமுண்டாக்கும் செயலாகும் என்று யாழ் பிரஜைகள் குழு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

காரைநகரில் யுத்தத்தைத் தீவிரப்படுத்தியதன் மூலம் அப்பகுதியின் தேவைக்கான மருந்து வகைகள், உணவு, பணம் மற்றும் அத்தியாவசியத்தேவைப் பொருட்களின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

குருணாகலவுக்கும், அம்பாறைக்கும் இடம்மாற்றும் உத்தரவு ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையானது அத் தொழிற்சாலை மூடப்படும் அபாயத்தை உணர்த்துவதாகும்.

யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிலையம் மூடப்பட்டுள்ளமையும், இதற்கான உபகரணங்கள், மூலப்பொருட்கள் எடுத்துவரத் தடை விதிக்கப்பட்டுள்ளமையும், விமானத்தாக்குதல்களாலும், எறிகணைத் தாக்குதல்களாலும் தமது அங்கங்களை இழந்த ஏராளமான பொதுமக்களைப் பாதிப்பதாக உள்ளது.

உணவுப் பொருட்கள் விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளமையும், வவுனியா ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளமையும் மக்களைப் பட்டினியின் விளிம்புக்கு இட்டுச் செல்வதாகவுள்ளது.

இதற்கு மத்தியில் வெளிநாடுகளிலிருந்து வடக்கு, கிழக்குப் பகுதி மக்களுக்கென வழங்கப்பட்ட உதவிகள் இந்த மக்களைச் சென்றடைவது கொழும்பில் தடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் ரஷ்யா, தாய்லாந்து போன்ற நாடுகள் வடக்கு, கிழக்கு மக்களுக்கு அளித்த உதவிகள் பற்றி அறிவித்துள்ள போதிலும் அவை இப்பிரதேச மக்களைச் சென்றடையவில்லை.

மேலும் உலக வங்கியும் ஏனைய நாடுகளும் வழங்கிய பொருளாதார உதவிகள் அழிவைத்தரும் யுத்தத்திற்கு பயன்படுத்தப்படுவது கவலைக்குரியதாகும். ஆகவே சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா யுத்தத்தை நிறுத்தவும், நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவும் முன்வர வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

## மலேரியா தடுப்பு நடவடிக்கைகள்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் மலேரியாத்தடுப்பு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மலேரியாத்தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த அனேக ஊழியர்கள் அகதிமுகாம்கள், குடிசனங்கள் நெருக்கமாக உள்ள குருநகர் போன்ற சில பகுதிகளுக்குச் சென்று மலேரியா நோய்த்தடுப்பு மருந்துகளான ''குளோரோகுயின், பிறிமாகுயின்'' ஆகிய குளிசைகளையும் விநியோகிப்பதுடன், சில பகுதிகளில் மலேரியா மருந்தும் அடிக்கப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்கிலும் மக்களுக்கும் இம்மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (42)

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ அம்பழன் (சுந்தரலிங்கம் ஜெகநாதன் தபாற்கந்தோர் வீதி கிரான்)
★ பரண் (திவாகரராஜா மோகன்ராஜா 9, பெரிய கடை, மன்னார்)
★ தனேந்திரன் (துரைசிங்கம் சிறீதரன் கல்லாறுவத்தை மாரீசன்கூடல் இளவாலை)
★ நடா (தம்பிராசா பாஸ்கரன் சித்திவிநாயகர் எதிரோசம் தம்பிலுவில் அம்பாறை)
★ லோகி (வேலாயுதம் சிவகுமார் 1ஆம் கட்டை புலோலி தெற்கு பருத்தித்துறை)
★ ஜெகன் (நடராசா சிவராசா பூநகரி)
★ கணேஸ் (இராஜதுரை ஜெயரட்ணம் தண்ணீரூற்று முள்ளியவளை)
★ டொனாவட் (இராமசாமி புவனகுமார் இரத்தினபுரம் கிளிநொச்சி)
★ சுஜன் (சின்னையா சிவரத்தினம் அளவெட்டி வடக்கு அளவெட்டி)
★ மஞ்சுதன் (சிவமாலை குகநேசன் புளியங்குளம் வவுனியா)
★ குலசிங்கம் (இராசலிங்கம் நேமன் 2ஆம் வட்டாரம் கண்டலடி வாகரை மட்டக்களப்பு)
★ சசி (மரியான்பிள்ளை ஞானம் நெளுக்குளம், மாங்குளம்)
★ அமுதன் (நடராஜா ராஜ்குமார் 4ஆம்கட்டை இணுவில் கிழக்கு)
★ மெரடோனா (கைலாசபிள்ளை சந்திரகுமார் அலங்கேணி கிண்ணியா)
★ (திலகன் அருணாசலம் சிவநாதன் 14ஆம் கொலனி மண்டூர்)
★ மருது (இராமசாமி மருதலிங்கம் 1பி, முத்தையன் கட்டு, ஒட்டிசுட்டான்)
★ வரதன் (வாரகன்) சின்னத்துரை சர்வகுமார் பேத்தவாய் வடக்கு, அளவெட்டி)
★ யுகந்தன் (நடராசா பத்மநாதன் 16ஆம் கட்டை கொக்குத்தொடுவாய்)
★ அப்பன் (ஜோன்செபஸ்ரியன் புதுக்குடியிருப்பு கிளிவெட்டி திருமலை)
★ பிரசாந் (கந்தசாமி மனோகரன் முட்டுச்சேனை, மூதூர்)
★ பார்த்திபன் (டொமினிக் கெனியூட் 5ஆம் வட்டாரம் பேசாலை மன்னார்)
★ நாகராஜ் (முத்துராஜா நாகராஜ புதிய கொலனி கண்டிவீதி மாங்குளம்)
★ இறை
★ அர்ச்சுனா
★ தமயந்தி (வைத்திலிங்கநாதன் கமலலோஜினி ஆத்திமோட்டை, இலுப்பைக்கடவை)
★ கிரேசா (சுவாமிபிள்ளை கிஜிதா 21, 1ஆம் குறுக்குத் தெரு, பாஷையூர்)
★ தவமணி (ஈஸ்வரநாதன் மஞ்சுளதேவி மருதங்கேணி வடக்கு, தாளையடி)
★ நேதாஜி (சிவஞானம் விஜயகுமார் ஓடைவெளி, நெடுங்கேணி)
★ நிசா (சின்னத்தம்பி, விஜயகுமாரி சின்னநகர், புலோலி தெற்கு)
★ கவி (சீவரட்ணம் ராஜி ஆதியமலை, உடுப்பிட்டி)
★ மனோஜ் (லோகநாதன் சிறிகலா இராசபுரம், கரடியனாறு, மட்டக்களப்பு)
★ மாலா (யாக்கோப்பிள்ளை ரோஸ்மலர் பூங்குளம், முள்ளிக்குளம் புத்தளம்)
★ கண்மணி (சரோஜினி முருகையா சின்னக்கடை மன்னார்)
★ மீனாட்சி (ராஜரட்ணம் கலைச்செல்வி 1ஆம் வட்டாரம், முள்ளியவளை)
★ அமுதப்பிரியா (பரமலிங்கம் அகிலகுமாரி 4ஆம் வாடி, புங்குடுதீவு)
★ பூபாலினி (நாகரத்தினம் பரமேஸ்வரி நியூ கும்பான் பேக்கரி, செல்வபுரம் முல்லைத்தீவு)
★ ஜெனிஸ் (தர்மராசா தயாநிதி அராலி தெற்கு, வட்டுக்கோட்டை)

# வவுனியாவில் 8 படை பலி; பல ஆயுதங்களும் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் நேற்று காலை 1 25 மணியளவில் சூடுவெந்த புலவுக்கும் சின்னக்குளத்து சிறிலங்கா இராணுவ முகாமிற்கும் இடையில் அமைந்திருந்த தொடர் காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் உக்கிரமான தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதல்கள் கருவேப்பங்குளப் பக்கமாகவுள்ள காவல் அரண்கள் மீது மேற்கொள்ளப்பட்டன.

இதில் ஐந்து இராணுவ காவல் அரண்கள் முற்றாக அழிந்தன.

இந்தச் சண்டையில் இராணுவத்தினர் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர் பலர்காயமடைந்தனர், பல ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டன. இருபோராளிகள் வீரமரணமடைந்தனர்.

காவல் அரண்கள்மீது தாக்குதல் நடந்து கொண்டிருந்த வேளையில் பிரதான முகாமில் இருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து அவர்களும் பின்வாங்கி முகாமிற்குள் முடங்கிக் கொண்டனர்.

புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்வருமாறு:

- ★ 303 - 4, மகசின் - 4
- ★ ரி 56 - 1
- ★ ரி 56 - 2 1, மகசின் - 10
- ★ ஆ. பி ஜி -1, செல் - 6, பூஸ்ரர் - 6
- ★ ஜே ஆர் - 2
- ★ ஐ எம் ரவைகள் - 4625
- ★ 303, ரவைகள் 747

இத்தாக்குதலைத் தொடர்ந்த ஏனைய தொடர் காவல் அரண்களில் இருந்த இராணுவத்தினரும் சின்னக்குஞ்சுக்குள இராணுவ முகாமிற்கு ஓடிவிட்டனர்.

## அகதி முகாமில் இரு தமிழர் கைது

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக மதுரை அகதி முகாம்களில் இருந்து மேலும் இரண்டு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இந்த வழக்கில் தேடப்பட்டுவரும் முக்கிய குற்றவாளியான சிவராசனுக்கு அடைக்கலமும் உதவிகளும் வழங்கினதாக தெரிவிக்கப் படுகிறது.

## நுண் கலை மாணவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழக நுண்கலைக் கழக மாணவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் வந்து கூடுமாறு அழைக்கப்படுகிறார்கள்.

## சிறிலங்கா நிலைவரத்தை சீர்தூக்கிப் பார்த்தே தீர்மானிக்க வேண்டும் — நரசிம்மராவ்

(சென்னை)

சீர்தூக்கிப் பார்த்த பின்னரே தீர்மானங்கள் மேற்கொள்ளவேண்டியிருக்கின்றன என இலங்கைப் பிரச்சினை தொடர்பான ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில இந்தியப் பிரதமர் பி வி. நரசிம்மராவ் இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

சிறிலங்கா தொடர்பாக இந்து நிருபர் கேட்ட கேள்வியாவது: புதிய சிக்கலான நிலையிலிருந்து இந்தியா எவ்வாறு விடுபடுவது? எல் ரி. ரி. ஈ. தொடர்பாக இராணுவத் தீர்வை நாடவேண்டாம் என்று இந்தியா கொழும்பைக் கேட்டு வருகிறது. இங்கு எழுந்துள்ள பிரச்சினைகாரணமாக அந்த நிலையை வலியுறுத்திக் கொண்டிருப்பது சாத்தியமானதா? சிறிலங்கா கொள்கையில் அணுகுமுறை என்னவாக இருக்கும்?

பிரதமர் ராவ் பின்வருமாறு பதிலளித்தார்.

சிறிலங்கா பிரச்சினைக்கு இலகுவான தீர்வு கிடையாது சீர்தூக்கிப் பார்த்த பின்தான் தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டும். ஏனைய விடயங்களில் உள்நாட்டு விடயங்களில் நாம் கவனம் செலுத்துகின்றோம். எதிர் காலத்தில் நாங்கள் உங்களிடம் கூறுவோம்.

ஒட்டுமொத்த வெளியுறவுக் கொள்கைபற்றி வினவப்பட்டபோது அது அப்படியே இருக்கும். ஆனால் அது கூடுதல் ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டுமெனப் பிரதமர் நரசிம்மராவ் பதிலளித்தார்.

## பரீட்சை தொடர்பாக கொழும்பு மௌனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பரீட்சைகளை நடாத்துவது தொடர்பாகக் கொழும்பு மௌனம் சாதிப்பதாக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் இலங்கை முழுவதும் க. பொ. த (சா: தரம்) க.பொ.த. (உயர்தரம்) புலமைப் பரிசில் பரீட்சை ஆகிய பரீட்சைகள் நடைபெறவுள்ளது தெரிந்ததே சகல பரீட்சார்த்திகளுக்குமான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது: ஆனால் போக்குவரத்து சிக்கலானமையால் வடபகுதி மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னர் இங்கு வந்து சேராதென்பதும் பரீட்சை வினாத்தாள்கள் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவுமில்லை. இவற்றைச் சுட்டிக்காட்டி கல்விப் பணிப்பாளர் பரீட்சைத் திணைக்களத்துடன் பல தடவைகள் தொடர்பு கொண்டபோதும் எதுவித பதிலும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் திட்டமிட்டபடி பரீட்சைகளை வடக்கில் நடாத்துவதற்கான முயற்சியை தான் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

## நாளை வெளிவருகிறது

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வவெளியீடான ''விடுதலைப்புலிகள்'' இதழ் நாளை வெளிவரவுள்ளது. இவ் விதழில் விடுதலைப் புலிகளின் முதலாவது மரபு வழிப் போர் அணியான சார்ள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி பற்றிய அறிமுகக் கட்டுரையும் ஆனையிறவு படைத்தளம் மீதான முற்றுகைப் போர் பற்றியதலைப்பு செய்திக்கட்டுரையும் இன்னும் பிற முக்கிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

## புலிகள் என்ற சந்தேகத்தில் 4 மாலைதீவுவாசிகள் கைது

ரயிலில் பயணம் செய்த நான்கு மாலைதீவு வாசிகளை விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர். இச் சம்பவம் பாணந்துறை பொலிஸ் பகுதியில் இடம் பெற்றது. பின்னர் இந்த நால்வரும் விடுவிக்கப்பட்டவரென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து பாணந்துறையை நோக்கி இதே நால்வரும் பயணம் செய்து கொண்டிருந்த போது இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பாதுகாப்பு பிரிவினர் இவர்களைக் கைது செய்தனர்.

## கூட்டத்திற்கு அழைப்பு

தனியார் கல்வி நிறுவன இயக்குனர்கள், ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 00 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற இருக்கிறது இதில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்டச் செயலகம் கோரியுள்ளது.

## மாணவன் சுட்டுக்கொலை; மக்கள் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள செட்டிப்பாளையம் என்னும் இடத்தில் உயர் வகுப்பு மாணவனொருவனை ரெலோ குழுவினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மேற்படி கிராமத்திற்குள் புகுந்த ரெலோக் குழுவினர் அமிர்சனன் ஜெகனேசன் (வயது21) என்ற மாணவனைச் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

அதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 30 மணியளவில் காக்காச்சிவெட்டை, பலாச்சோலை ஆகிய இடங்களைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பல அப்பாவிப் பொதுமக்களைக் கைதுசெய்து சித்திரவதைக் குட்படுத்தினர். பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அழகரத்தினம் உதயம் என்பவரது வீட்டில் இருந்த பொருள்களையும் இராணுவத்தினர் சேதப் படுத்தியுள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## இன்றிலிருந்து

நடந்த கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார் அக்கூட்டத்தில் இன்றில் இருந்து சகல ஊழியர்களும் நேரம் பிந்தாமல் கடமைக்கு சமூகம் தர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். தற்போது பருத்தித் துறைத்தபாலகத்தில் யாழ். நகருக்குரிய 03 வெளியூர் தபால் பொதிகள் இருப்பதாகவும் இதை எடுத்து வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கம் இணங்காவிட்டால் புதன்கிழமை நாங்கள் சைக்கிளில் பருத்தித்துறை சென்று எடுத்து வருவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார். (43)

## இராணுவ

பொறுப்பேற்று இராணுவத்தின் பேரிழப்புக்களை உலகிற்கும் சிங்களப் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்த அரசு அஞ்சுவதாக தெரியவருகிறது. ஆனையிறவில் மாபெரும் இராணுவ சாதனைகளை நிலைநாட்டி வருவதாக பொய்ப் பிரசாரம் செய்து வந்த அரசாங்கம் புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்களையும் தனது இழப்புக்களையும் மூடிமறைத்து வருகிறது. இதனால் இந்தச் சடலங்களைப் பொறுப்பேற்பது அரசாங்கத்திற்குப் பெரும் சங்கடத்தையும் இராணுவத்திற்குப் பெரும் அவமானத்தையும் ஏற்படுத்தலாமென கொழும்பு ஆட்சிபீடம் அஞ்சுவதாக தெரிகிறது.

## எரிகுண்டு

எரிந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை வை-12, அவ்ரோ, ஹெலிக்கொப்டர்கள் தீவிர தாக்குதலை நடத்திய வண்ணம் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

## வீதி ஒழுங்கு

கேட்கப்பட்டுள்ளனர். வேகமாக வாகனங்கள் வரும் சமயத்தில் வீதியோரத்தில் தரித்து நின்று பின்னர் தமது பயணங்களைத் தொடரும்படியும் கோரப்பட்டுள்ளது.

## சலாடின்

புலிகளால் தாக்கி அழிக்கப் பட்டது. அத்தோடு பல காவல் அரண்கள்மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். காவல் அரண்கள் பல சேதமடைந்தன.

அதேவேளை நேற்று நடைபெற்ற மோதலில், 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இறந்தவர்களின் தொகை இதைவிட அதிகமாகும் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 36 மணிநேரம்

கணியை சனிக்கிழமை பிற்பகலில் எதிர்கொண்டு தாக்கிய விடுதலைப் புலிகள் இராணுவத்தின் முன்னணிப் படைப் பிரிவைச் சிதைத்தனர்: பிற்பகலில் இருந்து அடுத்தநாள் நண்பகல் வரை நீடித்த இப் போரில் 40 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். 100 க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். கவசவாகனம் ஒன்று சேதமாகியது மூன்று சடலங்களும் அவர்களுடைய ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இரண்டாவது போர்முனை முள்ளியானில் ஏற்பட்டது. கட்டைக்காடு - நெடுகேணிப் பகுதியில் இருந்து முள்ளியான் ஊடாகவே இராணுவம் முன்னேறியிருந்தது முன்னேறிய பகுதிகளில் சங்கிலித் தொடர் போல் காவலரண்களை இராணுவம் அமைத்திருந்தது

இவ்வாறு முள்ளியான் பகுதியில் அமைத்திருந்த காவல் அரண்கள் மீது ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 - 10 மணிக்கு திடீர் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். அதேவேளை ஏனைய காவல் அரண்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது

முள்ளியான் பகுதியில் தாக்குதல் தொடுத்த புலிகள் இராணுவத்தின் சங்கிலித் தொடரை ஊடறுத்து முன்னேறி இருந்த இராணுவ அணியைச் சுற்றி வளைத்தனர். நேற்றுக்காலை வரை தொடர்ச்சியாக நடந்த இம் மோதலில் 60 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். 200க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் 29 படையினரின் சடலங்களும் பெருந்தொகையான ஆயுதங்களும் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

## பார்வைக்கு இல்லை

ஆனையிறவு மோதலில் கொல்லப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் சடலங்கள் முன்னர் அறிவிக்கப்பட்டதுபோல் இன்று முத்திரைச் சந்தியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட மாட்டாது எனத் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்பாக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ராஜனும், கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் பராவும் இராணுவத்தினரின் சடலங்களை மக்கள் பார்வைக்கு வைக்கும் முயற்சிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

## தானியங்கித்

பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்த மோதலின் பின்

- ★ ஜி பி எம் ஜி - 01
- ★ ரி 56 ரகத்துப்பாக்கி - 01
- ★ ரி.81 ரகத்துப்பாக்கி - 01

என்பனவும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மேலும் இம்மோதல்களில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் பல இன்னும் சிதறிக் கிடப்பதாக அங்கிருந்து திரும்பிய செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இவற்றில் நேற்றுப்பகல் சில ஆயுதங்களும், மேலும் ஒரு சடலமும் புலிகளால் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரி-56 ரகத்துப்பாக்கிகள் 15
- ★ ஆர். பி. ஜி 01

## 28 போராளிகள்

- ★ ஆரமுதா (தம்பவேல் விஜகுமாரி மட்டக்களப்பு)
- ★ பிலிப்ஸ் (செபஸ்ரியன் றெக்சன் குருநகர்)
- ★ குணா (வன்னியசிங்கம் புஷ்பராசா 7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு)
- ★ லோலோ (முக்கல நாதன் முரளிதரன் குரக்கன் புலம் புன்னாலைக்கட்டுவன்)
- ★ கில்பட் (ஜோசப் ஜெனி திருமலை)
- ★ குயிலன் (துரைராசா சிறீதரன் கொம்மாதுறை வந்தெவெட்டித்துறை)
- ★ எடிசன் (முருகு குமார் 3ஆம் வட்டாரம் சாம்பல் தீவு)
- ★ ஆனந்த் (கிருஷ்ண பிள்ளை தவராசா கரவெட்டி
- ★ அருள்ராஜ் (கந்தசாமி கலையமுதன் 5 ஆம் வாய்க்கால் பன்குளம்)
- ★ விஷ்ணு (ஜோசப் செல்லையா தியாகு பெரிய கட்டு செட்டிகுளம் வவுனியா)
- ★ டைரோன் (நடராசாஜெகதீஸ்வரன் தெல்லிப்பளை)
- ★ நளினி (மேலா இரத்தினராசா உரும்பராய்)
- ★ டொமினிக் (அருள் ஆனந்தராசா திருவையாறு கிளிநொச்சி
- ★ கிரிசா (தியாகராசா இருபாகரன் தெல்லிப்பளை)
- ★ அன்புதாஸ் (மாணிக்கம் துஷ்யந்தன் உவர்மலை திருமலை)
- ★ வரன் (சரவணமுத்து ரவிச்சந்திரன் மானிப்பாய்வீதி யாழ்ப்பாணம்)
- ★ சுந்தரநாயகி
- ★ நிசாந்தன் (இராசதுரை நந்தகுமார் உரும்பராய்)
- ★ தேவா (அற்புதநாதன் குமார் ஏழாலை)
- ★ வேணு (கந்தசாமி பிரபா மட்டக்களப்பு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.